5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை ஒத்திவைக்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''பேரவை விதி 25 (1)-ன் கீழ், பேரவை இன்று ஒத்திவைக்கப்பெற்று, மீண்டும் ஏப்ரல் திங்கள் 9 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடலாம்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 9—4—1984 காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

154. சென்னை, ஜெர்மன் தொழுநோய் சங்கத்திற்கு சொந்தமான இருபத்தொன்று வண்டிகளுக்கு வரி செலுத்துவதில் சலுகைகள் செய்வது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 20-1-1984 ஆம் நாளிட்ட 207 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பொற்றது.]

155. தமிழ்நாடு குடிநீர் வழங்கு—வடிகால் வாரியத்தின் 1979-80 ஆம் ஆண்டு கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை, [தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு குடிநீர் வழங்கு—வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47 பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

156. தமிழ்நாடு சர்க்கரை ஆலைக் கழகத்திடம் மதுரா சுகர்ஸ் லிமிடெட் நிறுவனத்தை ஒப்படைப்பது குறித்து தொழில் துறையின் 27-12-1983 ஆம் நாளிட்ட 1972 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்

ஆங்கிலம்), [தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மதுரா சுகர்ஸ் லிமிடெட் (நிறுவனத்தை கையகப்படுத்தல், மாற்றுதல்) அவசரச் சட்டத்தின் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 18/1983) 33 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

157. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (வருவாய் வரவினங்கள்) (ஆங்கிலம்) [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

109. கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984—85 (தமிழ், ஆங்கிலம்).

110. கோரிக்கை எண். 14—தமிழ்நாடு சிறைகளின் நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984—85. (தமிழ், ஆங்கிலம்).

111. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 21/1984).

112. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 22/1984).

113. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/1984) நகலும் இணைப்பும்.

114. உடுக்குறியிடப் பெறாதப் வினாக்களும், விடைகளும், (ஐந்தாம் பட்டியல்.)